**செய்தி வெளியீடு எண்: 380** **நாள் : 23.07.2016**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **அம்மா** அவர்கள் தமிழகத்தின் அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கவும், அவர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தவும், மாநில அளவிலான "**முதலமைச்சர் கோப்பைக்கான**" விளையாட்டுப் போட்டியினை நடத்திட ஆணையிட்டார்கள். இந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் முக்கிய நோக்கம் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துக்கொண்டு பயன் பெறுவதுமாகும். மேலும், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியினை மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

2015–2016 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான போட்டிகள் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி, கையுந்து பந்து, நீச்சல், மேசைப்பந்து, டென்னிஸ் மற்றும் இறகுப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் இருபாலருக்கும் கீழ்குறிப்பிட்ட மாவட்டங்களில் நடத்தப்பட்டுவருகிறது.

| Sl. No. | Discipline | Venue | Date |
|---|---|---|---|
| 1 | Basketball | Madurai | **16.07.2016 to 18.07.2016** |
| 2 | Table Tennis | | **18.07.2016 to 20.07.2016** |
| 3 | Swimming | SDAT Aquatic Complex, Velachery. | 23.07.2016 |
| 4 | Football | Dindigul | 29.07.2016 to 31.07.2016 |
| 5 | Tennis | Tirunelvelli | 29.07.2016 to 31.07.2016 |
| 6 | Volleyball | Erode | 28.07.2016 to 30.07.2016 |
| 7 | Shuttle Badminton | Dharmapuri | 29.07.2016 to 31.07.2016 |
| 8 | Athletics | Trichy | 30.07.2016 to 01.08.2016 |
| 9 | Hockey | | 06.08.2016 to 08.08.2016 |
| 10 | Kabaddi | Theni | August 2016 |

இந்த மாநில அளவிலான விளையாட்டில் முதல் இடம் பெறும் விளையாட்டு வீரருக்கு தலா ரூ.1.00 லட்சமும், இரண்டாம் இடம் பெறும் விளையாட்டு வீரருக்கு தலா ரூ.75,000/–மும், மூன்றாம் இடம் பெறும் விளையாட்டு வீரருக்கு தலா ரூ.50,000/– மும் ரொக்கப் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 612 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பரிசுத் தொகையாக ரூ.4,83,99,000.00 (ரூபாய் நான்கு கோடியே என்பத்தி மூன்று லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரம் மட்டும்) பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது. மேலும், இந்த முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியினை ரூ.809.00 லட்சத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்தப்பட்டு, பரிசுத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் 23.07.2016 இன்று நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான நீச்சல் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற 48 நீச்சல் வீரர்/ வீராகனைகளுக்கு **மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின்** அவர்கள் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், அரசு முதன்மைச் செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை டாக்டர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகள் 2015 – 16 ஆண்டிற்கான மாநில அளவிலான நீச்சல் போட்டிகள் 23.07.2016 அன்று சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் நடத்தப்பட்டதில் மொத்தம் 150 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அணி மேலாளர்கள் கலந்து கொண்டார்கள். இப்போட்டிகளின் வெற்றி பெற்றோரின் விவரம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது, இதனை தங்களின் மேலான பத்திரிக்கையில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**